எம்.சி.ஓ.பி எண்: 1022/2022 தேதி: 24.01.2025

மசா. : 1

பெயர் : மைக்கேல்

த/பெ. : குமாா்

வயது : 31

**<u>சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 15 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**<u>2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

தொழில் வருமானம் குறித்து ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சாி. இரவு விபத்து நடந்தது. ஆட்டோவை எவ்வளவு துாரத்தில் இருந்து பாா்த்தேன் என்றால் 10 அடியில் பாா்த்தேன். விபத்து நடந்த சாலையில் மத்தியில் தடுப்புச்சுவா் இருந்தது. ஆட்டோ வருவதை நான் பாா்த்தேன். 40 கிலோமீட்டா் வேகத்தில் வந்தேன். நான் வேகமாக வந்ததால்தான் கட்டுப்பாடை இழந்து விபத்து நடந்தது என்றால் சாியல்ல. எங்கள் வாகனத்தின் மோட்டாா் ஆய்வாளா் அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சாி. 2024 ல் ஓட்டுநா் உாிமத்தை புதுப்பித்துள்ளேன் என்றால் சாி. ரொம்ப அடி தலையில்தான். தலைக்கவசம் அணிந்து இருந்தால் தலைக்காயம் ஏற்பட வாய்ப்பு இல்லை என்பதால் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சாியல்ல. நவம்பா் 2022 க்கு பிறகு தொடா்சிகிச்சைக்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சாி. எனக்கு ஏற்பட்ட காயங்கள் குணமாகி விட்ட காரணத்தால்தான் தொடா்சிகிச்சைக்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சாியல்ல. நான் தகுதி உள்ளவனாக இருப்பதால்தான் ஓட்டுநா் உாிமம் புதுப்பிக்க முடிந்து உள்ள காரணத்தால் எனக்கு எந்த வருமான இழப்பிட்டு திறன் குறையவில்லை என்றால் சாியல்ல. நான் தற்பொழுது முன்பு விட குறைவாக சம்பாதிக்கிறேன். எனக்கு எந்த இயாலமையும் இல்லை என்றால் சாியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோாியுள்ள இழப்பீடு

தொகை அதிகம் என்றால் சரியல்ல. விபத்து என்னுடைய அஜாக்கிருதையால் நடைபெற்றுள்ள காரணத்தால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

X

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.